**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 38 of 2025**

**Prosecution Witness : PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திருமதி. Dr. சங்கரி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(A1, A2 Present)**

**Dated. 30.07.2026**

**முதல் விசாரணை**

நான் இலால்குடி அரசு மருத்துவமனையில் முதுநிலை குடியுரிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த உதவி மருத்துவர் ஜெயந்தி என்பவர் அதிகாரப்பூர்வமற்ற விடுப்பில் சென்றதால் மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26.09.2024 ம் தேதி அதிகாலை 03.15 மணிக்கு உதவி மருத்துவர் ஜெயந்தி என்பவர் பணியில் இருந்தபோது 27 வயது மதிக்கத்தக்க அருணாதேவி என்பவரை அவரது கணவர் சிகிச்சைக்கு அழைத்து வந்துள்ளார். அவரை உதவி மருத்துவர் ஜெயந்தி என்பவர் விசாரித்தபோது கடந்த 26.09.2024 ம் தேதி இரவு 12.00 மணியளவில் தெரிந்த 2 நபர்கள் அவரது வீட்டில் வைத்து விளக்கமாற்றால் தன்னை அடித்ததாக கூறியுள்ளார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. 2x1x1 cm அளவில் வலது காது மடலில் கிழிந்த காயம் காணப்பட்டது.

2. வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. 29.09.2024 ம் தேதி காலை 8 மணியளவிலிருந்து அவர் மருத்துவமனை

வளாகத்திலிருந்து தானாக சென்றுவிட்டார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையின் அடிப்படையில் சாதாரண காயம் என்று சான்று வழங்கப்பட்டுள்ளது. அருணாதேவி என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றானது **அ.சா.ஆ.6/அ.சா.7** ஆகும். மேற்படி சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் காயங்கள் ஏற்பட வாய்ய்புள்ளது.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>

பொதுவாக ஒரு நபர் மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடியாமல் அவராகவே சென்றுவிட்டால் அவருக்கு காயச்சான்றிதழ் வழங்க முடியுமா என்றால் முடியாது. இந்த வழக்கில் அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சை முடியாமல் அவராக சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரன காயம் என சான்று வழங்கியுள்ளது தவறு என்றால் சரிதான். அ.சா.1 மருத்துவரிடம் அவரது வீட்டில் வைத்து அடித்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காயங்களை தவிர அவருக்கு வேறு காயங்கள் இல்லை என்றால் சரிதான். வலது காது மடலில் அ.சா.1க்கு காயம் இருந்ததாக காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த இடத்தில் காயம் இருந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் இருட்டில் கீழே விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.07.30 11:45:30 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி